670 PLT

சிவ்பதம் பெற்ற

# திரு. மு. ஞானப்பிரகாசம்

அவர்களின் நினைவஞ்சலி

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

921
ஞானப்
SL/PK

ISSUED IN MEMORY OF THE LATE SRI M. GNANAPRAGASAM



பண்டுநால்வருக் கறமுரைத்தருளிப் பல்லுலகினி லுயிர் வாழ்க்கை
கண்டநாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டுபண்செயு மாமலர்ப் பொழின்மந்தை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய்வருள்செய்ஞ்ஞை கேதீச்சரமதுதானே

சுடுவார்பொடி நீறுநல்லதுண்டப் பிறைக் கீறும்
கடமார் களியானையுரி யணிந்த கறைக்கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான் திருக்கேதீச்சரத்தானே

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
28 AUG 2003
நூலகம்



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

சிவப்பேறு

தாது வருஷம் சித்திரை **13** சாலிவாகன சகாப்தம் **1919**

**1996 - 04 - 18**

# சைவ சிகாமணி திரு. ஞானப்பிரகாசம் அவர்கள்

இவ்வாண்டு எமது தேவஸ்தான கொடியேற்றக் கிரியைகளை நிறை வேற்றிவிட்டு நிற்கும் போது "குருக்கள் ஐயா என்னை ஞாபகம் இருக்கோ" என்று வினவுகிறார் ஒரு பக்தர். வேட்டி அங்க வஸ்திரம் தரித்து உடலிலே திருநீறணிந்து மெலிந்த மேனியராய்க் காணப்படுகின்றார். அவரைப் பார்த்த வுடன் எனக்கு ஞாபகம் வரவே "ஓம் வாத்தியார் ஞாபகம் உள்ளது, சிறு பராயத்தில் மயிலணி சைவ வித்தியாலயத்தில் படித்த காலத்தில் எனக்குப் பாடஞ் சொல்லித் தந்துள்ளீர்கள் என்று கூறி நீங்கள் பரமேஸ்வரா அதிபர் திரு. ஞானப்பிரகாசம் அல்லவோ என்றேன். சிரித்து விட்டு ஆசிரியர் தொழிலின் மகத்துவம் இதுதான் ஐயா! உங்களை 30 வருடங்களுக்கு மேலாக நான் காணவில்லை இன்று பொன்னம்பல வாணேஸ்வரர் உங்களை மஹோற்சவ சிவாச்சார்யாராக எனக்குக் காட்டி அருள் தந்துள்ளார். எனக்குச் சிவ சகஸ்ரநாம புத்தகம் தேவை. அதன் பொருளை எழுதி நூலாக வெளியிட உத்தேசம் என்றார். நான் சிவ சகஸ்ரநாம நூலை அவரிடம் கொடுத்தேன் . பின்னர் ஒரு மாதத்தின் பின் அவர் சிவபதம் எய்தினார் என்ற செய்தி எனக்குக் கிட்டியது.

***கல்விப் பணி:***

ஆம்! எமது ஆலயத்தைக் கருங்கல்லினால் அமைத்ததோடு யாழப்பாணத்துச் சிறார்கள் சைவச் சூழலில் கல்வி பயில ஆண்களுக்குத் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியையும் பெண்களுக்கு சுன்னாகம் மருதனாமடம் இராமநாதன் கல்லூரியையும் அமைத்த பெருமை சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களைச் சாரும். அவ்வாறு அவர் அமைத்த பரமேஸ்வராவின் புகழ்பூத்த அதிபராகத் திகழ்ந்தனர் ஏழாலை திரு. ஞானப் பிரகாசம் அவர்கள். அவரது காலத்தில் கல்வியில் மேம்பாடு கண்டமையோடு தமிழ், சைவம், என்பன நன்கு அங்கு செழித்து வளர்ந்தமையை இலங்கை யர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

***சமயம்:***

திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் ஏழு ஆலயங்களைக் கொண்டு விளங்கும் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது குடும்பம் சைவம், கல்வி, மருத்துவம், என்பவற்றில் பேர்போனது. இவர்களது குல தெய்வம் ஏழாலை மடத்தடிப் பிள்ளையார். பரமேஸ்வரா அதிபராக இருந்த காலத்திலும் ஓய்வு பெற்ற பின்னரும் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் பிள்ளையாரையே சிக்கெனப் பிடித்து வழிபட்டு வந்தார்.

ஈழத்தின் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்றான திருக்கேதீஸ்வர நாதர் திருப்பணியிலும் ஆலய நிர்வாகத்திலும் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் பெரும் பங்கு கொண்டிருந்தார்கள். பாலாவி ஆற்றில் தீர்த்தம் ஆடிக் கேதீஸ் வாநாதன் அவர்களைத் தினமும் வழிபடுவது அவரின் வேலையாகவிருந்தது.

இலங்கையில் நடைபெறும் சைவ மாநாடுகளில் அவரின் பங்கு மிகச் சிறந்ததாக இருந்தது. குறிப்பாகச் சொல்வதானால் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் ஒரு சைவ சித்தாந்தி. சைவ சிந்தாந்தத்தை வளர்க்க அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. சிவன் தாள்களை வணங்கியவர் அவரது திருப்பாதங்களை எய்துவர் என்கிறது சைவசமயம். பரமேஸ்வரா அதிபர் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் பரமேஸ்வரனின் திருப்பாதங்களை அடைந்து விட்டார். அவரது ஆன்மா சாந்தியடைய சிவகாமி சமேத ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரரை வணங்குகின்றேன்!

*லோக சமஸ்தா சுகினோ பவந்து !*

**சி. குஞ்சிதபாதக் குருக்கள்.**
ஆலோசகர் : கல்வி உயர் கல்வி அமைச்சு
இந்து கலாச்சாரத்திணைக்களம்.



# A Message

Mr. Gnanapragasam,a science graduate was elevated to the post of "Principal, Parameshwara, College" a prestigious Hindu educational institution in Jaffna founded and established by the great leader the late Sir Ponnambalam Ramanathan. He Excelled in his position as the principal and was a shining example for others to follow. Despite being a disciplinarian, he was also a very kind hearted and amiable personality.

It is rarely one finds a science graduate becoming religious and devotional. Mr. Gnanapragasam,was an exception - he studied the scriptures and became an authority on "Saiva sidhantham". After fulfilling his obligations towards his children, he has been leading the life of an ascetic - a "Gnani". It was a life of sacrifice seeking the"all pervading absolute Reality the light of Lights - the Supreme Lord Shiva".

As a devoted "Shiva Baktha" Mr. Gnanapragasam took great interest in the development of the ancient "Gowri Ambaal Sametha Thiruketheeswarana than's" place of abode, the famous Thiruketheeswaram Temple which has a unique feature of receiving "hymns" sung by two great saints Thirugnana Sambanthar Swamigal and Suntharamoorthy Swamigal amongst the revered "Naalvar".

At the time when Col. C. Sabanayagam died, Mr. Gnanapragrasam was the obvious choice and was unanimously elected president of this society. He has rendered yeoman service to the Society and despite his age had been leading the "patha yathirais" on an yearly basis from Jaffna (by foot) to the shrine of Thiruketheeswaram Temple.

He has written serveral books, articles and participated in seminars and workshops relating to "Saiva Sithantham". He has been not only a scholar in the

"Sithantha" philosophy but also a propagator of the "Sithantha" faith.

"God Almighty" the "Lord Shiva" has called his devotee Mr. Gnanapragasam to be with him forever hereafter. The members of the family must be proud of his achievements and may "Lord Shiva" give them the right mental framework and will power to follow the footsteps of Mr. Gnanapragasam

***V. Kailasapillai***
Chairman
Board of Trustees.



# Gnanapragasam

In founding Parameshwara College, Sir P. Ramanathan thought that he was doing something new and in dire need. The aim was to enable students of Parameshwara college, in all possible ways, to know and to realise in their lives. the best that has been thought, felt and said in Sanskrit, Tamil and English.

Gnanapiragasam was student, teacher and principal of Parameshwara college for many years. If anybody came anywhere near realisation of the Ramanathan ideal, it was Gnanapiragasam.

He read, and read widely and deeply in all three languages all his life. He devoted all his time, energy, ascetic fervour and assiduous pratice of ritual and yoga to the realisation of the ageless wisdom.

He was a clean being, pure and bright, like the glowing embers of the sacrificial fire.

It goes without saying, that he was at all times, a very good and trustworthy friend and colleague. It is my good fortune to have known him.

**S. Sivapathasundaram.**

# ශ්‍රේෂ්ඨ දර්ශනික හා අධ්‍යපන ඥ එම්. ඥනපිරකාසම් මැතිතුමා

මසකට පෙර අභාවප්‍රාප්ත වූ එම්. ඥනපිරකාසම් මහතා අප කාලයේ ජීවත් වූ අසාමාන්‍යණී දුර්ලභ ගණයේ විද්වතෙක් ලෙස හඳුන්වන්නට පුළුවනි. මෙතුමා දැන ඇඳින ගෙන කලක් ආශ්‍රය කිරීමට ලැබීම මගේ ලොකු භාග්‍යයක් ලෙස මා සලකනවා. ඔහු දිනක් මා හමුවෙන්න අවුත් ශෛව සිද්ධාන්ත ආගම ධර්මය ගැන ඔහු ලියා ගෙන යන පොතක් පිළිබඳ සෂහාය දෙන මෙන් මගෙන් ඉල්ලීමක් කළේය. සංස්කෘත සූත්‍ර ශෛලියෙන් පිළියෙළ කරන එම කෘතිය ඉංග්‍රීසි – සිංහල – දෙමළ භාෂා තුනටම පරිවර්තනය කර පාඨකයන් අතට පත් කිරීම ඔහුගේ අදහස බව මට දැනගන්න ලැබුණා. පොතේ සිංහල අනුවාදය පිළියෙළ කර දෙන්නට මා ඉතා සතුටින් බාර ගත්තා. මාස කීපයකට පසු මේ ගැන ඔහුගෙන් වැඩි දුරට දැන ගන්න නොලැබුන. හෙයින් ඔහු සැලසුම් කළ පොත කලඑලිය දුටු වාදැයි මම නොදනිමි. ඒ කාලයට අනතුරු ඇති වූ අර්බූදකාරි තත්ත්වය නිසාණී අපේක්ෂා කළ කාර්යයේ නිමාව දක්නට නොලැබුණා වෙන්න පුළුවනි. ඒ කෙසේ වෙතත්ණී මේ සද්ගුණවත් විද්වතා මසකට උඩ දී අභාව ප්‍රාප්ත වූ බව ඔහුගේ බෑනණුවන් ගෙන් දැන ගන්න ලැබී මම අතිශය ශෝකයට පත්වීමි.

ඥනපිරකාසම් මහතා ගැන සිහි කරන කොටණී මානව ශාස්ත්‍ර විෂයන් (Humanities) පිළිබඳ මෙන්ම නූතන විද්‍යා විෂයන් පිළිබඳවත් එක ලෙස ප්‍රවීණ බහු ශ්‍රැත පඬිවරයෙක් අප සිහියට නැග එනවා. ඔහු ලබා ඇති උභය උපාධිවලින් ම මේ බව මොනවට ස්වුට වෙනවා. හින්දු දර්ශනය උපනිෂද් ග්‍රන්ථ හා වේදන්තණී සාංඛ්‍ය ආදි ෂඩ් දර්ශන ක්‍රම ගැන ඔහුගේ මනා අව බෝධයක් තිබුණා. ඔහු ප්‍රියකළ විශේෂ විෂය වූයේ ශෛව සිද්ධාන්ත ආගම ධර්මයයි. එය ඔහුගේ ජීවිත මාර්ගය ආලෝකමත් කළ රත්තරන් පහණයි. අප අතර ඇති වූ විවිධ සාකච්ඡාවලින් ඒ බව මට හොඳින් ඒත්තු ගැන්විණි. ශිවබෝධම් නමැති



දුර්බෝධ හින්දු ආගමික සංකල්පය ඔහු පැහැදිලි කර දුන්නේ සහජ හැකියාවකිනි.

අධ්‍යාපන විශේෂඥයකු ලෙස මෙතුමා ඉටු කළ සේවය ඉමහත්ය. යාපනයේ විශ්ව විද්‍යාලය හා රාමනාදන් සෞන්දර්ය අධ්‍යාපන ආයතනය පිහිටුවීමට පෙරමුණ ගෙන ක්‍රියා කළ දේශප්‍රේමියෙකි. මෙතුමා ඔහුගේ අව්‍යාජ ආගමික භක්තිය හා ප්‍රතිපත්ති ගරුක චරිත ශුද්ධිය නිසා විය යුතුයි තිරුකේතීස්වරන් කෝවිලේ දායක සභාවේ සභාපතිකම සහ රාමනාදන් භාරකාර අරමුදලේ ප්‍රධාන භාරකාර යනාදි තනතුරු ජීවිතාන්තය දක්වා ම හොබවනු පිණිස ඔහු තෝරා පත් කරනු ලැබුවේ.
ඥනපිරකාසම් මහතාණන්ගේ චරිතාපදානයේ හැම අංශයකට වඩා දීප්තිමත් ලෙස බැබලෙන්නේ එතුමාගේ මානවවාදී ආකල්පයයි (Humanistic Attitude) මෙතුමා සැමරීමේ දී සංස්කෘත පඬිවරයකුගේ අනගි ශ්ලෝකයක් ඉබේ ම මෙන් සිහියට නැගෙයි.

අයං නිජඃ අරෝ වේති ගණනා ලඝු චේතසාම්
උදර චරිතානාන්තු වසුධෛව කුටුම්බකම්

මෙතෙමේ අපේම කෙනෙකිණී මේ තෙමේ වෙනත් කෙනෙකිණී මෙසේ කල්පනා කරන්නේ පටු සිත් ඇති පුද්ගලයන්ය. උදර සිත් ඇති උතුමන්ට නම් මුළු ලෝකයම එක විශාල පවුලකි.

ඥනපිරකාසම් මහතාගේ මානවවාදී ආදර්ශය මතු පරම්පරාවන්ට ආලෝකයක් වේවා යි ප්‍රාර්ථනා කරමු.

කැළණිය විශ්ව විද්‍යාලයේ
සංස්කෘත සම්මාන මහාචාර්ය
එම්. එච්. එෆ්. ජයසූරිය.

# Synopsis

Death removed Mr. Gnanapriagasam from our midst a month ago. He was a rare man in many respects.Fore most he was a scholar second to none in saiva siddantha philosophy. He met me to seek help in writing a book which he was preparing on this subject.

This time being a period of upheaval in the country, I am not sure whether the proposed work came to be published.

When speaking about Mr. Gnanapragasam it has to be mentioned that his knowledge of the humanities and modern science was simply encyclopaedic His twofold academic qualifications bear out this fact.

His knowledge of Hindusim and vedanta was so vast and deep that it is well nigh impossible to find his equals in this respect. He explained very difficult and knotty philosophic problems in a lucid simple manner. This showed his mastery of the subject.

Mr. Gnanpragasam had clearly grasped the intricacies of Sivabodam, an offshoot of Hindusim and explained the flaws in the doctrine to the satisfiction of many who grappled with this outgrowth.

He was also a peer among the modern educationists of this country having contributed in his own way to the creation of the Jaffna University and the Ramanathan School of Aresthetic Studies.

His philosophy of life could be summed up from what is in a Sanskrit stanza 'All the world is one family'

***Prof. M. F. H. Jaysuriya***
Emiritus Professor of Sanskrit.



Laxsu Book. 01, #10 (1996. 05. 16)

# சில குறிப்புகள்.....

திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபைத் தலைவர் சைவசித்தாந்த வித்தகர் முந்நாள் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர், சேர். பொன். இராமநாதன் அவர்களின் மருமகன் திரு. நடேசன் அவர்களின் அன்புக்குரியவராக இருந்து அவர்களின் தர்மஸ்தாபனங்னளுக்கும் தலைவர். இத்தனை சிறப்புக்குரியவராக இருந்தும். தன் பெருமை அறியாத, ஞானமே உருவாகிய ஞானப்பிரகாசம் ஐயா அவர்கள் இறைவனடி சேர்ந்ததை நினைவுகூர அடியேன் ஆற்றொணுத் துயரத்துடன் எழுதும் சில குறிப்புக்கள்:

ஐயா அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரி அதிபராக இருந்த காலத்திலும் அவர்களுடன் அடியேனுக்கு தொடர்பு இருந்ததும், திருவாசகமடத்து திருவாசக விழாவில் பங்குகொண்டதும், திருக்கேதீஸ்ச்சரத் திருப்பணிச்சபைக்குத் தலைவராக வந்ததும் நாங்கள் செய்த பாக்கியம் என்றே கருதுகிறேன். ஐயா அவர்கள் இத்தனை சீக்கிரத்தில் எங்களை விட்டு பிரிந்தாரே என்று எண்ணும் போது தாங்க முடியாத கவலை. என் செய்யலாம் - விதியை யாரால் வெல்ல முடியும்.? அவர்கள் இறைவனிடம் முறையிட்டு இருப்பார் போல தெரிகிறது. சுந்தரமூர்த்திசுவாமிகள் எத்தனை நாள் பிரிந்திருப்பேன் என் ஆரூர் இறைவனை என்று முறையிட்டது போல், திருக்கேதீச்சரமும் மடங்களும் மூடப்பட்டது மட்டுமல்ல, யாழ்ப்பாணம் நல்லூர் முதலான கோயில்களும் பள்ளிக் கூடங்களும் மடங்களும் இல்லாதிருக்க நான் இங்கு இருக்கமாட்டேன் என விண்ணப்பித்திருக்கலாம்.ஆகவேதான் கணிகண்ணன் போகிறான் காமருபூங்கண்ணமணிவண்ணா நீ இங்கிருக்கவேண்டாம் எனப் புலவர் இறைவனைக் கூப்பிட்டது போல் ஐயா அவர்களையும் இறைவன் கூப்பிட்டிருக்கிறார்என்றே அடியேன் கருதுகிறேன். ஆகவே நாம் துக்கப்படுவதில் அர்த்தம் இல்லை. எங்கள் துக்கத்திற்க்கு இறைவன் சந்நிதியிலிருந்து விமோசனம் தருவார் என பிரார்த்திப்போம்.

ஆயினும் அவர்கள் திருக்கேதீஸ்சரத்தில் இருந்து செய்த தொண்டுகளை ஞாபகப்படுத்தி நமது உள்ளக்கிளியில் அவர் உருவத்தை போற்றவேண்டிய கடப்பாடுடையோம். அவர்கள் கோயிலில் நிற்கும் போது கேதீஸ்வரநாதனே பிரத்யட்சமாக நிற்கிறார் என்று நினைப்போம். ஐயா அவர்கள் சங்கரர் போல் சகல ஞானமும் கைவரப் பெற்றவர்கள், அவர்களை ஞானம் என்றே எல்லாரும் அழைப்பார்கள். இறைவனே இந்த அவதாரம் என்று கூறினும் மிகையாகாது. அவர்கள் திருக்கேதீச்சரத் திருப்பணி சபைக்குத் தலைவராக வந்த பின் செய்த தொண்டு பலவாயிருப்பினும் அடியேன் திருவாசக மடத்தில் அவர்கள் செய்த மகத்தான தொண்டையே இங்கு குறிப்பிடுகின்றேன். திருவாசக விழாவிற்கு தலைமதாங்குவார்.

புராணபடணத்திற்கு பயன் சொல்லுவார். சிவபூசை மகாநாட்டுக்குத் தலமைதாங்குவார். மகேஸ்வரர் பூசை முன்நின்று நடத்துவார். அவர்கள் செய்த தொண்டைப் போற்றாதார் இல்லை. அவர்கள் யாழ்ப்பாணம் நல்லூருலிருந்து பூநகரி மார்க்கமாக அடியார்கள் கூட்டத்தினுடன் பாதயாத்திரை செய்வதுபோற்றுதற்குரியது. திருக்கேதீச்சரம் பாதயாத்திரை வரும் அடியார்களை பாத பூசை செய்து வரவேற்ற பாக்கியம் சிறுயேனுக்கும் உண்டு. ஐயா அவர்கள் தென்னிந்திய யாத்திரை கூட கால் நடையாகவே செய்திருக்கிறார். அவர்களை அடியேன் நாயன்மார்களில் ஒருவராகவே போற்றுகின்றேன். ஐயா அவர்கள் திருவாசக மடத்தின் வெளியீடான "திருக்கேதீச்சரக் கோயில் வரலாறு" இரண்டாம் பதிப்பு 1984 வெளியிடுவதற்குச் சிரமம் பாராது ஏழலையிலிருந்து ஸ்ரீகாந்தா அச்சகத்திற்கு வந்து சரிபார்த்து புஸ்தகம் அச்சேற உதவியதுடன் ஒரு முன்னுரையும் எழுதியிருக்கிறார். அத்துடன் "மூவர்தேவாரமும் திருக்கேதீச்சரமும்" என்ற கட்டுரை எழுதியதுடன் யாத்திரை சபையின் பணிபற்றியும் கட்டுரை எழுதியிருக்கிறார். அத்துடன் 1984இல் நல்லூர் நல்லை ஆதீனத்தில் புஸ்தக வெளியீடும் செய்தார்கள். அவர்கள் செய்த தொண்டு எம்மால் எழுத்தில் எழுதமுடியாது. அவர்கள் தெய்வ அவதாரம் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எழுதி காட்டமுடியாத சிறப்புடையவர்கள். அவர்கள் இறைவனால் அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார் அவர்களின் உருவத்தை மனதில் நிறுத்தி வழிபடுவோமாக. நாம் ஒன்றும் அறியோம்.

எல்லாம் அவன் செயல்.

S. சரவணமுத்து
திருவாசக மடம்
திருக்கேதீஸ்வரம்.





*"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலிற் தோன்றாமை நன்று*

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்"*

அடியேன் அதிகாலை மூன்று மணிக்கு துயிலெழுவது வழக்கம். அன்றும் அப்படித் துயிலெழுந்து நித்திய கரும விதிகளை முடித்தபின் சரியாக வானொலிப் பெட்டியை காலை ஆறு மணிக்குத் திருப்பினேன். வானொலியில் செய்திகள் முடிந்ததும் மரணச் செய்திகள் அறிவிக்கப்பட்டன. அப்போது ஏழாலையில் வசித்தவரும், முன்னாள் யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரி அதிபரும், திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபைத் தலைவருமான முருகேசு ஞானப்பிரகாசம் அவர்கள் காலமானார் என்று அறிவிக்கப் பட்டது.

இரு நாளைக்கு முன்புதான் ஐயா அவர்கள் கொழும்பு வந்துள்ளார்கள் என்பதை ஓர் பக்தர் மூலம் அறிந்து ஆன்னாரைத் தரிசிக்க ஆவல் கொண்டிருந்தேன்.

ஐயா அவர்களை அடியேன் கிட்டத்தட்ட 50 வருடத்திற்கு மேல் அறிவோம். எனினும் அடியேன் இருப்பது ஏழாலை கிழக்கு குப்பிளான். ஐயா வசித்தது ஏழாலை மேற்கு. இரண்டிற்கும் இடைப்பட்ட தூரம் இரண்டு மைலாகும்.

அமரர் திரு முருகேசு ஞானப்பிரகாசம் அவர்களுடன் எமது தந்தையார் நெருங்கிய நடபுடையவர். எமது தந்தையார் தனது மிக இளமைக் காலந் தொட்டு சிவனடியார்களையும் சமயப் பெரியார்களையும் இரு கண்களாகப் போற்றி வந்தமையால் ஒருநாளைக் கொருதரமாயினும் ஐயாவிடம் சென்று கலந்துரையாடி வருவார்.

இவர்களின் நெருக்கமான புனிதமான நட்பினால் அடியேனுக்குத் கல்வி பயில வாய்ப்பிருந்தது. உண்மையாக அந்தகாலத்தில் பெண்கள் கல்வி கற்பதைக் கிராம மக்கள் விரும்புவதில்லை. நாம் கல்வி பயில விரும்பிய போது ஐயா அவர்கள் "இக்காலத்தில் பெண்கள் கல்வி கற்பது நன்று. எனது பெண்பிள்ளைகளும் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்கிறார்கள். உங்கள் மகளையும் கற்க விடுங்கள்", என்றார்.

உண்மையாக ஐயா அவர்களை நாம் அக்காலத்தில் நேருக்கு நேர் கண்டதில்லை. 1957 - 60 வரை காரைநரகரில் நாம் ஆசிரியையாக இருந்த காலத்தில் ஐயா அவர்கள் காரைநகரிலுள்ள பிரசித்தி பெற்ற

வாசிகசாலையில் சிவஞான சித்தியார் வயோதிபர் சிலருக்கு விளக்கம் செய்வது, இயல்பாக இருந்தது. அப்போது அவர் ஞான பானு போன்று காணப்படுவார்.

அவர்களுடைய சீரிய தொண்டின் பெருமைகளை இவ்வளவுதான் என்று வரையறுத்துக் கூற முடியாது. ஏழாலையில் ஏழு கோவில்கள் உண்டு. இந்த ஏழு கோவில்களையும் தரிசிப்பதுடன் நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றார். பேச்சு தமிழாகவும் மூச்சு சைவ சமயமாகவும் இருந்த அன்னார் இலைமறை காயாக இல்லற ஞானியாக இருந்து அளப்பரிய பணிகளைத் தமது கிராமத்திற்காகச் செய்தார்.

ஐயா அவர்களுடன் நெருங்கிய தொடர்பும் அவர்களின் செயற்கரிய செயல்களையும் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மூலம் ஏற்பட்டது.

ஈழத்தில் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகிய திருக்கேதீஸ்வரம் போர்த்துக்கீசரால் முற்றாக அழிக்கப்பட்ட பின், மந்தோட்டத்தில் "தேன் பொந்து" ஒன்றுள்ளது என்று ஐந்தாம் குரவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கூறினார். இதனையடுத்து சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களின் தலைமையில் திருக்கேதீஸ்வர ஆலய புணருதாரணம் நடந்தது.

ஏழாலையில் அன்னாரின் மனைக்கு அருகில் மடத்துப் பிள்ளையார் என்று ஒன்றுண்டு. இவ்வாலயம் அரிய பெரிய தவமுனிவாக்காகவும், சமய குரவர்காகவும் அமைக்கப்பட்டது. 64 நாயன்மாரின் குருபூசை, திருவிழா நவராத்திரி போன்ற நிகழ்ச்சிகளும் திருவெம்பாவையும் சிறப்புற நிகழக் காரணமாக இருந்தது.

ஏழாலையின் சிறப்பு ஐயா அவர்களில் தங்கி இருந்தது. ஐயா அவர்கள் ஏழாலை மேற்கில் ஞான மலையாகவும் இல்லற ஞானியாகவும் இருந்து அவ்வூர் மக்கட்கு மட்டுமன்றி எல்லார்க்கும் ஆரிய பெரிய தொண்டாற்றினார்.

இந்த வகையில் அமரர் ஞானப்பிகாசம் ஐயா அரிய பெரிய ஞானப் பொக்கிஷம் என்றால் மிகையில்லை.

ஓம் சாந்தி

சிவமயச் செல்வி. புலவர். சி. விசாலாட்சி



# ஸ்ரீ மு. ஞானப்பிரகாசம் அவர்கள்

முன்னெப்போதும் விட கடந்த ஐந்து வருடங்களில் மடத்துக்குச் செல்லும் வேளைகளிலோ அன்றித் திரும்ப வீடு செல்லும் நேரங்களிலோ இரு நிமிட நேரமாவது எங்களுடன் அளவளவாமல் அவர் சென்றதில்லை. சில ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு மூன்று மணித்தியாலங்கள் பயனுள்ள அறிவு சார்ந்த விடயங்கள் பற்றி அவர் கூறுகின்ற புதிய நோக்குகளினாலாய கனமான சுவாராஸ்யமான கதைகளை கருத்துக்களை விரும்பிச் சுவைத்திருக்கின்றேன் பெயருக்கோற்றாற்போல் "ஞானம்". நிறைந்த பொக்கிஷங்கள் அவை. நாவலர் விபுலானந்தர் போன்ற யுக புருஷர் அவர். அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம். என்பதும் எங்கள் உறவினர் என்பதும் எங்களுக்கு நிச்சயம் பெருமை தரும். இத்தனை அறிவும் ஞானமும் கொண்ட ஒருவரை இனி வாழ்நாளில் சந்திப்போமா என்பது கேள்விக்குரிய விடயம்.

***அ. உமாசங்கர்***
அவுஸ்திரேலியா.

# Invocation

That is full; this is full. The full comes out of the full. Taking the full from the full the full itself remains.

Aum! May We, O Gods, hear what is auspicious with our ears; O ye, who are worthly of worship, may we see with our eyes what is auspicious.

May we enjoy the life allotted to us by the Gods, offering praise, with our bodies strong of limb.

May He protect us both; may He be pleased with us both; May we work together with vigour; may our study make us illumined; may there be no dislike between us.

*Om shanti, shanti,shanti*

Holding the body steady with chest neck and head erect, causing the senses and the mind enter into the heart, the wise man should cross by the boat of Brahman all the streams which cause fear.

Repressing the breathings, here (in the body), let him who has controlled all movements, breathe through his nostrils, with diminished breath. Let the wise man restrain his mind vigilantly as (he would) a chariot yoked with vicious horses.

In a level clean place, free from pebbles, fire and gravel, favourable to thought by the sound of water and other features, not offensive to the eye in a hidden retreat protected from the wind, let him perform his exercises.

For smoke, sun, wind ,fire, fireflies, lightening, crystal, moon, these are the preliminary forms which produce the manifestation of the Brahman in yoga



When the fivefold quality of yoga is produced, as earth water fire air and ether arise, then there is longer sickness, no old age, no death to him who has obtained a body made of the fire of yoga.

Lightness, healthiness, steadiness, clearness of complexion, pleasantness of voice, sweetness of odour and slight excretions, these they say, are the first results of the progress of yoga.

Even as a mirror stained by dust shines brightly when it has been cleaned, so the embodied when he has seen the real nature of the self becomes integrated, of fulfilled purpose and freed from sorrow.

When by means of the (real) nature of his self he sees as by a lamp here the (real) nature of Brahman, by knowing God who is unborn steadfast, free from all natures he is released from all fetters

He indeed is the God who pervades all regions. He is the first - born he is within the womb. He has been born and he will be born. He stands opposite all persons having his face in all directions

The God who is in fire, who is in water, who has entered into the whole world (the God), who is in plants, who is in trees, to that God be adoration, yea, be adoration,

**Svetasvataropanisad, II, 8- 17.**

He who is one, without any colour, by the manifold exercise of his power distributes many colours in his hidden purpose and into whom in the beginning and at the end the universe is gathered may He endow us with a clear understanding.

He who is the sourcse and origin of the Gods, the ruler of all, Rudra, the great seer who beheld the golden germ when he was born, may He endow us with clear understanding.

'You are unborn' with this thought someone in fear approches you, O Rudra may your face which is gracious protect me for ever.

Rudra, hurt us not in my child or grandchild, hurt us not in my life, hurt us not in my cattle, hurt us not in my horses, slay not our heroes in your wrath for we call on you always with oblation

***Svetasvataropanisad 1v, 1, 12, 21, 22***

The face of truth is covered with a golden disc.Unveil it ,O Pusan so that I who love the truth may see it.

O pusan, the sole seer, O controller, O sun, offspring of Prajapati spread forth your rays and gather up your radiant light that I may behold you of loveliest form Whosoever is that person (yonder) that also I am.

May this life enter into the immortal breath; then may this body end in ashes. O Intelligence, remember, remember, what has been done, Remember, O Intelligence what has been done, Remember.

O Agni, lead us along the auspicious path to prosperity, O God, who knowest all our deeds. Take away from us deceitful sins. We shall offer many prayers unto thee.

***Savasyopanisad 15 - 18.***

Thou indeed art our father who does take us across to the other shore of ignorance

*Salutations to the supreme seers!*
*Salutation to the supreme seers!*

***Prasna up VI, 8.***

Aum, May Mitra be propitious to us; may varuna be propitious to us; May Aryaman be propitious to us; May Indra and Brhaspati be propitious to us; May Visnu of wide strides be propitious to us.

Salutation to Brahaman. Salutation to Vaya; Thou indeed are the perceptible Brahman. Of thee, indeed perceptible Brahman have I spoken. I have spoken of the right; I have spoken of the true; That has protected me; That has protected the speaker. Aye, That has protected me. That has protected the speaker

*Aum shanti shanthi shanthi*



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## விநாயக வணக்கம்

*விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்*
*கண்ணிற் பணிமின் கனிந்து*

**- இரட்டை மணிமாலை**

ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

திருச்சிற்றம்பலம்

*சீதக் களபச் செந்தா மரைப்பூம்*
*பாதச் சிலம்பு பலவிசை பாடப்*
*பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்*
*வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்*
*பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்*
*வேழ முகமும் விளங்குசிந் தூரமும்*
*அஞ்சு கரமும் அங்குச பாசமும்*
*நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்*
*நான்ற வாயும் நாலிரு புயமும்*
*மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்*
*இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்*
*திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்*
*சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான*
*அற்புத னீன்ற கற்பகக் களிறே*
*முப்பழ நுகரு மூஷிக வாகன*
*இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்*
*தாயாய் எனக்குத் தானெழுந் தருளி*
*மாயாப் பிறவி மயக்க மறுத்துத்*
*திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்*
*பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து*
*குருவடி வாகிக் குவலயந் தன்னில்*
*திருவடி வைத்துத் திறம்இது பொருளென*
*வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்*



Laxsu Book. 01, #1 (1996. 05. 16)

கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசைவை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமும் இல்லா மனோலயம்
தேக்கி என்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வெளி காட்டிச்



சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

## முற்றிற்று

சிற்றுணர்வாற் குற்றமென்ன செய்துளே னேனுமவை
முற்றுமினிநீ பொறுத்தென் முன்னிற்பாய் - கற்றுணர்ந்தோர்
புந்திதனிற் றோன்றிப் பொழியுங் கருணைமதத்
தந்திமுகப் பிள்ளாய் சரண்

சரணமலர் வாழ்த்தித் தமிழ்சொலப் பெற்றார்க்கு
மரணபவ மாற்று மருந்தே - கிரணவரைக்
கொப்போதுந் தும்பிமுகத் தோங்காரத் துட்பொருளே
எப்போதுங் காப்பாய் எனை

*பூமியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி*
*ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி*
*வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி*
*ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி*

*விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போல்*
*மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்*
*உறவு கோனட்டுணர்வுக் கயிற்றினால்*
*முறுகவாங்கிக் கடைய முன்னிற்குமே*

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர் சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத் தெம் புனிதனார்க்கே

கானுமாறு காணேன் உன்னை அந்நாட் கண்டேனும்
பாணே பேசி என்தன்னைப் படுத்ததென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆரமுதே அத்தா செத்தே போயினேன்
ஏ ஞுணில்லா நாயினேன் என்கொண்டெழுகேன் எம்மானே

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே



*மன்னுக தில்லை வளர்கநம்*
*பத்தர்கள் வஞ்சகர் போயகல*
*பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து*
*புவனியெல்லாம் விளங்க*
*அன்னநடை மடவாள் உமைகோன்*
*அடியோ முக்கருள் புரிந்து*
*பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த*
*பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே*

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகொலாம்

எதிரிலாத பத்தி தனைமேவி
இனிய தரணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது னேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
வமுதி கூறி மிர்த்த பெருமானே.

# Sri M. Gnanapragasam
## - Extracts from his writings.

The doctrine of the spiritual Guru is the most cardinal doctrine of the saiva Agamas... They give a long list of spiritual Gurus, all stationed in the various realms of pure consciousness (suddha Maya). They deal with the suddha Vidyeswaras (liberated beings more energetic than emotional), Maheswaras (more emotional than energetic) and even anu sadasivas balanced in devotional and energetic aspects......

The first Guru is a mayatattvadarsi ..... He helps us to have a darsanam of prakrti and her evolutes and enables us to disestablish ourselves from Karmendriyas, Jnanendriyas and in a sense even antakaranas...........

The second Guru more universal more powerful ..... a mere look , a touch makes the devotee saintly. In saiva Agamic terminology he is called Ananta deva Nayanar seated on the mustakam of suddhaasuddha maya.. In a sence he can be compared to Sri Krisna, the upadesa murtti of the Bhagavadgita........

Laksyartha of the Gita is the name of God, Krisna Mantra. To an earnest seeker the Mantra (either lords name or the Guru Mantra) is the only boat to cross the oceans of Kevalam and Sakalam
The Spiritual Teacher, 1982.

Now in the 20th century, inspite of progress in applied sciences and technology.... We see the sad spectre of demoniacal forces of every complexion, committed to the fatal cult of killing man. what is missing today in this world is its true soul, the perfected purusa.... the guide of the human spirit.....

What we see inside us are our miniature selves........ entrenched in folly and ignorance. what we see outside in the world of history are our own creations and our objective counterparts.... very often we forget that we are the makers of history and cvilization. It is bound to change to the extent we are prepared to change.



Therefore what we need today is a profound change in every grain of our being. The world should be told that this change is not automatic. It involves honest conscious effort and meaningful response to the historic and enviornmental reality..... In short if we possess awarenes purity and single heartedness in our personal life we get changed. This is the true practice of religion. This is the acme of statesmanship too.

Hinduism is always opposed to dangerous restrain imposed on sensuous life because it is this sensuous life that is essential as the basis on which a durable cult of truth and knowledge can be built.

***Tat purusah***
- The Ageless spirit 1988

The Guru darsanam is itself a religious vision a vision in which the visible and invisible aspects of God fuse with each other. Overwhelmed, the desciple, trembling in the presence of the Guru, in a quivering subdued voice tells him in silence "Tat Tvam Asi" Thou art that, Thou art God Siva himself. Visibly moved by the utter honesty, utter dust like nothingness of this desciple, the Guru takes him into his fold of sanctified souls.

***Tamilakam & saiva thought,*** 1991.

In the present phase of our unfortunate political history all our past karmas, collective as well as individual are burnt out. And we stand on the threshold of a new age, a new way of life in this our punya bhumi - Yalpanam.

Bearing ourselves humbly before our God, let us as servants of our ageless Sri Lankan culture of maitreya and kindness brace ourselves to the tasks ahead in this hour of the history of our dear mother land Sri Lanka.

***Sankhya Thought;*** 1994.

எம்மை உடைய தலைவர்
திரு. மு. ஞானப்பிரகாசம் சிவபதப் பேறு பெற்றதைத்
தொடர்ந்து நிகழ்ந்த சடங்குகளிலும், மற்றும்
கிரியைகளிலும் பங்குபற்றிய உற்றார் உறவினர்கள்
நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

75 4/2, வாட் பிளேஸ்,
கொழும்பு 07.

திருமதி. சிவஞானசுந்தரமும்,
பிள்ளைகளும்,
திரு. நடராஜாவும்,
குடும்பத்தினரும்.

We wish to express our
gratitude to all our
relatives and friends
who attended and took
part in the funeral
rituals and the
subsequent rites at
home and elsewhere

75 4/2, Ward Place,
Colombo 07.

Mrs. S. Gnanapragrasam
& Children,
Mr. R.Nadarajah
& Family

670 PLT